2. கவன ஈர்ப்பு.

(1) கன்னியாகுமரி விவேகானந்தர் நினைவுப் பாறை நிர்வாகத்தினர் படகுப் போக்குவரத்தை நிறுத்தி விட்டதால் சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்பட்டுள்ள அவதிகள் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திருவாளர்கள் சி. ரா. லெட்சுமிகாந்தன், சு. மீனாட்சிசுந்தரம் ஆகியோர் ஒரு கவன ஈர்ப்பு தீர்மானம் கொடுத்துள்ளார்கள். திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"கன்னியாகுமரி விவேகானந்தர் நினைவுப் பாறை நிர்வாகத்தினர் 5—12—1980 முதல் படகுப் போக்குவரத்தை நிறுத்தி விட்டதால் சுற்றுலா பயணிகளுக்கு ஏற்பட்டுள்ள அவதிகள் குறித்தும், அங்கு விவேகானந்த கேந்திரத்தினருக்கும், உள்ளூர் மீனவர்களுக்கும் இடையே நடைபெறும் மோதல்கள் குறித்தும்".

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அவை முன் விவர அறிக்கை@ வைக்கப்பட்டுள்ளது.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : விவர அறிக்கை விவரமாக இருக்கிறது. ஆனால் அதிலே ஒன்றைப்பற்றித் தெளிவாக இல்லை. படகுப் போக்குவரத்தை நிறுத்திவிடப் போவதாக ஒரு எண்ணத்தை கேந்திரத்தினர் ஏற்படுத்தியதாகவும் மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்களும் முதலமைச்சர் அவர்களும் அது குறித்து முயற்சி எடுத்துக்கொண்டதாகவும் குறிப்பிட்டிருக்கிறது. ஒப்பந்தப்படி இரு தரப்பினரும் நடந்துகொள்கிறார்களா ? தற்பொழுது படகுகள் ஓட்டப்படுகின்றனவா ? கடற்கரையில் மணல் வாருவதன் காரணமாக அவர்கள் படகுகளை எடுத்துச்செல்ல முடியாமல் அவதிப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. அதுகுறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, இந்த ஒப்பந்தத்தைப் பொறுத்தவரையில், முடிந்த முடிவு அல்ல. தற்காலிகமாக இருக்கின்ற சூழ்நிலைகளுக்கு ஏற்ப எடுக்கப்பட்ட முடிவு இது. இந்த ஒப்பந்தத்தின் காரண

@ 164 165 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாக இரண்டு தரப்பிலே ஒரு சாராருக்குச் சங்கடம் ஏற்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் ஒரு கமிட்டியை அமைத்து அறிக்கை கொடுக்க கேட்டோம். இப்பொழுது அறிக்கை வந்திருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. கேந்திரத்தில் உள்ளவர்களோடு நேரிடையாகப் பேசி அதற்குப் பிறகு அறிக்கையை வெளியிட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மீனவர்களுக்கும் சங்கடம் ஒன்றும் இல்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். 23—3—1981 அன்றும் 25—3—1981 அன்றும் கூட தலைமைச் செயலாளர் அவர்கள் இதுகுறித்துப் பேசியிருக்கிறார்கள். இரண்டு தரப்பினருக்கும் பாதிப்பு ஏற்படாமல் நடவடிக்கை எடுக்கப்படும். இப்பொழுது போக்குவரத்து நடைபெறுகிறதா என்று கேட்டார்கள். எடுத்துச் செல்ல சாமான்கள், பொருள்கள் இல்லை, அவர்களுக்கு அவை கிடைக்கவில்லையென்று சொல்லி அதைச் செய்ய சிரமமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதுகுறித்தும் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில பொருள்கள் கிடைக்கவில்லையென்ற காரணத்தால், போக்குவரத்து நடைபெறவில்லையென்று சொன்னார்கள். உண்மையிலேயே பொருள்கள் கிடைக்கவில்லையா அல்லது வேண்டுமென்றே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதா ? எது உண்மை ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : வேண்டுமென்று நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தகவல் வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினருக்கு வந்திருக்கலாம். அரசாங்கத்துக்கு அதுபற்றி அதிகாரபூர்வமான தகவல் இன்னும் வரவில்லை. இடம் தேவை. மண் அள்ளுவதற்குத் தேவையான சாமான்கள் தேவை. அகவே இவை குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அதை எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : கன்னியாகுமரி கடலோரத்தில் மேலும் மேலும் மண் தோண்டப்படுவதால், மண் அரிப்பு ஏற்பட்டு, வருங்காலத்தில் கன்னியாகுமரியே கடலில் மூழ்கிவிடுமோ என்று மக்கள் அச்சப்படுகிறார்கள்

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஏன் சபிக்கிறீர்கள் ?

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அங்கே தடுப்புச் சுவர் கட்டப்படுமென்று வாக்குறுதி அளிக்கப்பட்டதா ? அது எந்த அளவுக்கு உண்மை ? அது நிறைவேற்றப்படுமா ? பாலம் கட்டி விவேகானந்தர் நினைவுப் பாறையையும் படகுத் துறையையும் இணைத்துவிட்டால், இப்படி படகு விட தேவையில்லை. அந்த வகையில் செய்ய வேண்டுமென்று மக்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அரசு இதுகுறித்துப் பரிசீலித்து ஆவன செய்யுமா ?

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அங்கே இப்படிப்பட்ட ஒரு சில சங்கடங்கள் இருக்கின்றன என்பதை நாங்கள் பார்த்திருக்கிறோம். மக்கள் சொல்வதைக் கேட்டுத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். நாங்கள் நேரிலே நிலைமைகளைப் பார்த்திருக்கிறோம். கடலரிப்பு ஏற்படுவதைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்டலாமா ? பாலம் கட்டலாமா ? அல்லது வேறு எப்படிச் செய்தால் மக்களுக்குப் பலன் கிடைக்கும் என்று பார்த்துச் செய்வதற்காகத்தான் ஒரு கமிட்டி அமைத்தோம். அது இப்போது ஒரு அறிக்கை தந்திருக்கிறது. மீனவர்களையும் விவேகானந்தர் நினைவுப் பாறை அமைப்பாளர்களையும் அழைத்துப் பேசி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அங்கே பாலத்துறை பகுதியிலே மீனவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அங்கே இருக்கிற பாலம் அறுந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். அதை மீண்டும் ஏற்படுத்த அரசு முயற்சி செய்யுமா ? மீண்டும் விவேகானந்தர் நினைவுப் பாறைக்கு போக்குவரத்து ஏற்படும் நிலை ஏற்பட்டால், அரசே அதை ஏற்று நடத்துமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அங்கே அரிப்பு ஏற்பட்டதற்காக 1 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. பாலம் அறுந்துவிட்டதாக உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதுபற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை. போக்குவரத்து ஏற்பட்டால் அரசே ஏற்று நடத்துமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். தேவை ஏற்படுமானால், அரசாங்கம் மக்களுடைய நன்மையைக் கருதி எதையும் செய்யத் தயாராக இருக்கிறது. யாரையும் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. ஒருவேளை தேவை ஏற்பட்டால், எல்லோரையும் கலந்து பேசி அதற்குப் பின்பு படிப்படியாக நல்லமுறையிலே நடவடிக்கை எடுக்கப்படும்.